ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2021.11.11

**மத்திய வங்கி "அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள்: 2021இன் முக்கிய பண்புகளும் 2022இற்கான வாய்ப்புக்களும்" இனை வெளியிட்டுள்ளது**

இலங்கை மத்திய வங்கி "அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள்: 2021இன் முக்கிய பண்புகளும் 2022இற்கான வாய்ப்புக்களும்" இனை இன்று நிகழ்நிலையில் வெளியிட்டது. இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்தின் வாயிலாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியீட்டினைப் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.[1]

"அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகளில்" பிரதிபலிக்கப்பட்டவாறு 2021இல் இலங்கைப் பொருளாதாரச் செயலாற்றத்தின் பொதுநோக்கொன்று கீழே தரப்பட்டுள்ளது:

*இலங்கைப் பொருளாதாரம் 2020இன் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட சுருக்கத்திலிருந்து வலுவாக மீளெழுச்சியடைந்திருக்கின்றது. பொருளாதாரத்தின் முக்கிய துறைகளின் பரந்துபட்ட மீட்சியினைப் பதிவுசெய்து உண்மைப் பொருளாதாரம் 2021இன் முதலரைப்பகுதியில் 8.0 சதவீதத்தினால் (ஆண்டுக்காண்டு) வளர்ச்சியடைந்திருந்தது. இம்மீட்சியானது அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் பரந்தளவிலான வியாபாரங்களிற்கும் தனிநபர்களிற்கும் வழங்கப்பட்ட அசாதாரணமான கொள்கைத் தூண்டல்கள், நாடளாவிய ரீதியிலான தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டத்திற்கிசைவாக தெரிவு செய்யப்பட்ட நகர்வு மீதான கட்டுப்பாடுகளின் படிப்படியான தளர்த்தல் மற்றும் உலகளாவிய நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்புதல் போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்டுள்ளது.*

*அரசாங்கமானது ஏனைய நேரடியான நிதியியல் ஆதரவிற்கு மத்தியில் தாழ்ந்த வரி முறைமையின் மூலமாக 2019இன் இறுதியில் அறிவிக்கப்பட்ட இறைத் தூண்டல் வழிமுறைகளைத் தொடர்ந்தது. வியாபாரங்களுக்கும் தனிநபர்களுக்கும் வழங்கப்பட்ட பாரியளவிலான படுகடன் சட்ட இசைவுத் தாமதம் 2021 காலப்பகுதியில் மேலும் நீடிக்கப்பட்டு அதன் மூலம் உலகளாவிய நோய்த்தொற்றின் பன்முக அலைகளுக்கு மத்தியில் ஆர்வலர்களினால் முகங்கொடுக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் இடையூறுகளின் தாக்கங்கள் சுமூகமாக்கப்பட்டன. மத்திய வங்கியினால் 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்னெப்பொழுதுமில்லாதவாறு நாணயக் கொள்கை ஆதரவு வழங்கப்பட்டமையினதும் 2021இன் சனவரி தொடக்கம் ஓகத்து நடுப்பகுதி வரை அது தொடரப்பட்டமையினதும் காரணமாக சந்தை வட்டி வீதங்கள் வரலாற்றிலேயே தாழ்ந்த மட்டங்களிற்கு வீழ்ச்சியடைந்து அதன் மூலம் வியாபாரங்களினதும் தனிநபர்களினதும் கொடுகடனுக்கும் பொருளாதாரத்தினை மீண்டெழச் செய்வதற்குத் தேவையான முதலீட்டினை குறைப்பு நிரப்புச் செய்வதற்கும் வசதியளிக்கப்பட்டது.*

*உலகளாவிய நிதியியல் சந்தைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகுவழிக்கு மத்தியில் தாழ்ந்த வட்டி வீதச் சூழலானது இறைத்தொழிற்பாடுகளுக்கு நன்மையளித்தது. மேலும், உலகளாவிய நோய்த் தொற்றுக்கு மத்தியில் விரிவடைந்த நிதியிடல் இடைவெளியினை நிரப்புவதற்கு திறைசேரி உண்டியல்களினை கொள்வனவு செய்வதன் மூலம் மத்திய வங்கியானது அரசாங்கத்திற்கு பாரியளவிலான நிதிகளை வழங்கியது. எனினும், நடுத்தர காலத்தில் மித மிஞ்சிய பணவீக்க அழுத்தங்கள் கட்டியெழுப்பப்படுவதனை முற்கூட்டியே தடுக்கின்ற அதேவேளையில்*

[1] தமிழ் பதிப்பிற்கான இணைய இணைப்பு: https://www.cbsl.gov.lk/ta/வெளியீடுகள்/பொருளாதார-மற்றும்-நிதியியல்-அறிக்கை/அண்மைய-பொருளாதார-அபிவிருத்திகள்/அண்மைய-பொருளாதார-அபிவிருத்திகள்-2021

*வெளிநாட்டுத் துறையிலுள்ள சமநிலையின்மைகளைத் தீர்ப்பதற்குமாக மத்திய வங்கி 2021 ஓகத்து நடுப்பகுதியில் கொள்கைவட்டி வீதங்கள் மற்றும் நியதி ஒதுக்கு விகிதத்தை (2021 செத்தெம்பரிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில்) உயர்த்தியதன் மூலம் நாணய இறுக்கமாக்கல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.*

*வணிகப்பொருள் ஏற்றுமதிகள் உலகளாவிய நோய்த் தொற்றுக்கு முன்னைய மட்டங்களை அடைந்த வேளையில், வழமைக்குத் திரும்பும் நடவடிக்கைகள் அத்துடன் உலகளாவிய சந்தையில் அனைத்து முக்கிய பண்டங்களின் விலைகளின் உயர்வு என்பவற்றினைப் பிரதிபலித்து இறக்குமதிச் செலவினமும் உயர்வடைந்தது. உலகளாவிய நோய்த்தொற்று நிலைப்பாடுகளின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களுக்கு மத்தியில் ஊக நடவடிக்கைகள் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மேலும் அழுத்தத்தினைத் தோற்றுவித்து ஏற்றுமதிப் பெறுகைகள் மீதான கட்டாய மாற்றுதல் தேவைப்பாட்டினை விதித்தல், செலாவணி வீத வழிகாட்டலை வழங்குதல் மற்றும் இறுதியாக அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு ஆதரவளிப்பதற்காக திரவத் தன்மையை வழங்குதல் போன்றவற்றின் மூலம் தலையிடுவதற்கு மத்திய வங்கியினைத் தேவைப்படுத்தின. இதேவேளை, சுற்றுலாத் துறையின் தொடர்ச்சியான பின்னடைவினால் பணிகள் வர்த்தகத்தின் செயலாற்றம் தொடர்ந்தும் குன்றியதாகவேயிருந்தது. சுற்றுலாத் துறையானது உலகளாவிய பயண நடவடிக்கை மீளத்தொடங்குதல் மற்றும் கொவிட்-19 இற்கு எதிரான தடுப்பூசி வழங்கல் முன்னேற்றமடைதல் என்பவற்றுடன் விரைவாக மீண்டெழுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் தாக்குப்பிடிக்கும் தன்மையுடன் தொடர்ந்துமிருந்த தொழிலாளர் பணவனுப்பல்கள் நாட்டிற்கு வெளியிலிருந்தான பயணம் மீளத்தொடங்கப்பட்டமை, வெளிநாட்டு தொழிலுக்கான மந்தமான புறப்பாடுகள் மற்றும் வங்கித்தொழில் முறைமைக்கு வெளியிலிருந்து செலாவணி வீத நன்மையைப் பெற்றுக்கொள்வதற்கான தேடல் போன்றவற்றினை முக்கியமாகப் பிரதிபலித்து அண்மைய மாதங்களில் மிதமடைந்தன.*

*வெளிநாட்டுத் துறையிலுள்ள உயர்வடைந்த குறுங்கால பாதிப்படையக்கூடிய தன்மைகள் மற்றும் மிதமடைந்த வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களின் காரணமாக நிதியியல் துறையில் அவதானிக்கப்பட்ட அழுத்தங்கள் போன்றவை அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் கூட்டிணைக்கப்பட்ட முயற்சிகளினால் தீர்க்கப்பட்டு வருகின்றன.*

*வணிகப்பொருள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளினதும் தொழிலாளர் பணவனுப்பல்களினதும் நியதிகளில் நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களினை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய முயற்சிகளினால் ஆதரவளிக்கப்பட்டு நடுத்தரகாலத்தில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு நிலுவை மேம்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பாரியளவிலான செயற்றிட்டங்களுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடு, உபாயமற்ற சொத்துக்களைப் பணமாக்குதல் ஏனையவற்றிற்கு மத்தியில் கலந்துரையாடலிலுள்ள பல்வேறு நிரப்பு நிதியிடல் வசதிகளுடன் இணைந்து எதிர்வரும் காலப்பகுதியில் அரசாங்கத்திற்கான கணிசமான படுகடனை உருவாக்காத வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைக் கவர்ந்து அதன் மூலம் வெளிநாட்டு நாணயப் படுகடன் பணிக் கொடுப்பனவிற்கு வசதியளிக்கும். மொத்த அலுவல்கள் ஒதுக்குகள் குறுங்கால பாதிப்படையக்கூடிய தன்மைகளுக்குப் புறம்பாக எதிர்வரும் காலத்தில் போதுமான மட்டங்களிற்கு உயர்த்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்களினால் பிரதிபலிக்கப்பட்டவாறு செலாவணி வீதம் போட்டித்தன்மை வாய்ந்ததாகத் தொடர்ந்துமிருக்கின்றது.*

*வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவு கடப்பாடுகளினைத் தீர்த்துக் கொள்வது தொடர்பில் இலங்கையின் இயலுமை தொடர்பில் நாட்டிற்கான பன்னாட்டுத் தரமிடல் முகவராண்மைகள் உள்ளடங்கலாக பல்வேறு தரப்பினரின் தேவையற்ற ஊகத்திற்குப் புறம்பாக அரசாங்கமானது அதன் அனைத்து வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களினையும் பூர்த்திசெய்துள்ளது. இதேவேளை, உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் விரிவடைந்த அரசாங்க வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையானது நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்புதல் மற்றும்*

*அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட செலவினச் சிக்கனப்படுத்தல் வழிமுறைகளுடனும் நடுத்தரகாலத்தில் கட்டுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.*

*இதேவேளை, உயர்ந்த உணவு விலைகள், நிருவாக ரீதியில் தீர்மானிக்கப்படுகின்ற பல்வேறு விலைகளின் மேல் நோக்கிய திருத்தங்கள் மற்றும் உலகளாவிய பண்ட விலைகளின் உயர்விற்கிசைவாக தெரிவுசெய்யப்பட்ட இறக்குமதிப் பண்டங்களின் விலைக் கட்டுப்பாடுகளின் தளர்த்துதல் போன்றவற்றின் முக்கிய காரணமாக முதன்மைப் பணவீக்கம் 4 - 6 சதவீத இலக்கிடப்பட்ட வீச்சின் மேல் எல்லையினை விஞ்சியுள்ளது. பொருளாதாரத்தில் வலுவடைகின்ற கேள்வி நிலைப்பாடுகளைக் குறித்துக் காட்டி மையப் பணவீக்கமும் ஒரு உயர்வினை அண்மையில் பதிவுசெய்தது. குறுங்காலத்தில் முதன்மைப் பணவீக்கம் இலக்கிடப்பட்ட மட்டங்களுக்கு மேலாகவிருக்கின்ற போதிலும் நெகிழ்ச்சித் தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் தேவையேற்படும் நேரத்தில் பொருத்தமான முற்கூட்டிய வழிமுறைகளுடன் நடுத்தர காலத்தில் முதன்மைப் பணவீக்கத்தை இலக்கிடப்பட்ட வீச்சில் பேணுகின்ற அதேவேளையில் உள்ளார்ந்த வாய்ப்பினைப் பொருளாதாரம் அடைந்துகொள்வதற்குத் தேவையான ஆதரவினை உறுதிப்படுத்திக் கொள்வதிலும் மத்திய வங்கி தொடர்ந்தும் அர்ப்பணிப்புடனிருக்கின்றது.*

*உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்திலிருந்து பொருளாதாரத்தினை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளுக்கு மத்தியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஆதரவுடன் ஏற்றுமதி சார்ந்த உற்பத்திப் பொருளாதாரமொன்றினை உருவாக்கிக் கொள்வதனை நோக்கியதும் பொருளாதார நடவடிக்கைகளை பன்முகப்படுத்துவதற்குமான அரசாங்கத்தின் முயற்சிகள் நடுத்தரகாலத்தில் இலங்கைப் பொருளாதாரம் வளர்ச்சி உத்வேகத்தினைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் அதன் தாக்குப்பிடிக்கும் தன்மையை உயர்த்துவதற்கும் துணைபுரியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.*

## முடக்கங்களின் பொருளாதாரத் தாக்கம்

சார்ஸ், எச்1என்1 அல்லது எபோலா போன்ற தொற்றுநோய்களின் முன்னைய நிகழ்வுகளைப் போலன்றி கொவிட்-19 நோய்ப்பரவல் குறுகிய காலத்தினுள் உலகளாவிய நோய்த்தொற்றொன்றாகத் துரிதமாக பரிணாமமடைந்தமையானது உலகெங்கிலுமுள்ள நாடுகள் முன்னெப்பொழுதுமில்லாத விதத்தில் முடக்கங்களினையும் ஏனைய வகையிலான நகர்வு மீதான கட்டுப்பாட்டினையும் அறிமுகப்படுத்துவதனைத் தேவைப்படுத்தியது. அவ்வாறான கட்டுப்பாடுகளின் தாக்கமானது பன்னாட்டு நாணய நிதியத்தின் மதிப்பீடுகளின் பிரகாரம் 2020இல் 3.1 சதவீத உலகப் பொருளாதாரச் சுருக்கத்தில் பிரதிபலித்திருக்கின்றது.

இலங்கையிலும் உலகளாவிய நோய்த்தொற்றினதும் அதனுடன் தொடர்புபட்ட முடக்கங்களதும் நகர்வு மீதான கட்டுப்பாடுகளதும் சமூகப்-பொருளாதார தாக்கங்கள் கணிசமானவையாகும். 2020 மாச்சு-மே காலப்பகுதியில் உலகளாவிய நோய்த்தொற்றின் முதலாம் அலை கடுமையான நாடளாவிய ரீதியான முடக்கமொன்றின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டு அதன்பின்னர் கட்டம் கட்டமாக தளர்த்தப்பட்டிருந்தது. நாடளாவிய ரீதியான முடக்கம் 2020இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் இலங்கைப் பொருளாதாரத்தின் ஆண்டிற்காண்டு 16.4 சதவீத சுருக்கத்திற்கு வழிவகுத்தது. 2020 ஒத்தோபர்-நவம்பர் காலப்பகுதியின் இரண்டாம் அலை தெரிவுசெய்யப்பட்ட முடக்கங்களினாலும் நகர்வு மீதான கட்டுப்பாடுகளினாலும் தீர்க்கப்பட்டமையானது பொருளாதாரப் பின்னடைவினை ஓரளவிற்குக் குறைத்தது. ஆயினும், மீட்புச் செயன்முறை சீர்குலைந்து காணப்பட்டதுடன் பொருளாதாரம் நான்காம் காலாண்டில் ஆண்டிற்காண்டு 1.3 சதவீத வளர்ச்சியொன்றினை மாத்திரமே பதிவுசெய்தது. இதற்கமைய, ஏறத்தாழ 5 சதவீத உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியொன்றின் ஆரம்ப எதிர்பார்க்கைக்கு மாறாக இவை இலங்கை 2020இல் 3.6 சதவீதம் கொண்ட அதன் உயர்ந்தளவான பொருளாதார சுருக்கத்தினைப் பதிவுசெய்வதனை விளைவாக்கின. 2021 ஏப்பிறலிலிருந்தான உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையானது இதுவரையான காலப்பகுதியில் அதன் மிகப் பெரிய அலையாகக் காணப்படுகின்றது. மூன்றாம் அலைக் காலப்பகுதியின் நகர்வு மீதான கட்டுப்பாடுகளும் தெரிவுசெய்யப்பட்டனவாகவே காணப்பட்டன.

உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலைத் தடுப்பதற்கு முடக்கங்களும் நகர்வு மீதான கட்டுப்பாடுகளும் அத்தியாவசியமாக அமைந்த வேளையில் பேரண்டப் பொருளாதாரம் தொடர்பிலான அவற்றின் தாக்கம் கடுமையானதாகும். 2019 ஏப்பிறலில் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட எறிவுகளின் பிரகாரம் இலங்கையின் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி 2020இல் ரூ. 17.39 ரில்லியனாகவும் 2021இல் 19.17 ரில்லியனாகவும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், உலகளாவிய நோய்த்தொற்றுடன் பொருளாதாரம் 2020இல் ரூ. 14.97 ரில்லியன் பெறுமதியான பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியொன்றினை மாத்திரமே பதிவுசெய்ததுடன் 2021இல் ரூ. 16.5 ரில்லியன் பெறுமதியான பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியொன்றினைப் பதிவுசெய்யக்கூடும். இது ஏறத்தாழ ரூ. 2.5 ரில்லியன் பெறுமதியான பெயரளவு நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் திகைப்பூட்டும் ஆண்டு இழப்பொன்றினைக் குறித்துக்காட்டுகின்றது.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று எவ்வித முக்கிய பொருளாதார துறையினையும் விட்டுவைக்காத வேளையில், வர்த்தக மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளைக் கொண்ட முக்கிய வெளிநாட்டுச் செலாவணி வருவாயீட்டும் துறைகள் உலகளாவிய நோய்த்தொற்றினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட வேண்டும். இதன் விளைவாக, இது நாட்டிற்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களில் வீழ்ச்சியினைப் பிரதிபலித்து அதன்மூலம் செலாவணி வீதத்தின் உறுதிப்பாடு மீது எதிர்க்கணியமாகப் பாதித்ததுடன் முதலீட்டாளர் நம்பிக்கை மீது எதிர்க்கணியக் கசிவுத் தாக்கத்தினை ஏற்படுத்தியது. இறைத்துறை தொடர்பில், பொருளாதார நடவடிக்கையின் மெதுவடைவு அதிகரித்துவரும் செலவினத்திற்கு மத்தியில் அரசிறையில் குறைப்பிற்குப் பங்களித்து அதன்மூலம் இறைத்துறையின் மீது குறிப்பிடத்தக்க அழுத்தங்களை ஏற்படுத்தியதுடன் மேலதிக கடன்பாடுகளைத் தேவைப்படுத்தியது.

முடக்கங்களதும் நகர்வு மீதான கட்டுப்பாடுகளதும் தாக்கத்தினை தொழிற்சந்தை அணுகுமுறையிலிருந்தும் மதிப்பிடப்படலாம். தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2020இன் நான்காம் காலாண்டிற்கான தொழிற்படை அளவீட்டுக் காலாண்டு அறிக்கையின் பிரகாரம் 8.03 மில்லியன் தொழில்புரியும் குடித்தொகையினரில் சுய தொழில்புரிவோர் மற்றும் குடும்பத் தொழில்புரிவோருக்குப் பங்களிப்போர் மற்றும் தனியார் துறையில் தொழில்புரிவோர் மொத்த தொழில்நிலையின் 82 சதவீதமாகக் காணப்படுகின்றனர். மேலும், 2019இற்கான தொழிற்படை அளவீட்டு ஆண்டறிக்கையின் பிரகாரம், முறைசாராத் துறை தொழில்நிலை மொத்த தொழில்புரிவோரில் 57.4 சதவீதமாக விளங்கியது. இது தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு மத்தியிலும்கூட பெரும்பான்மையினர் அவ்வாறான இடையூறுகளில் பாதிக்கப்படக்கூடிய நிலையிலிருக்கின்றனர் என்பதனைக் காட்டுகின்றது. மேலும், போரின் முடிவிலிருந்து 4.4 சதவீத சராசரி தொழிலின்மையுடன் ஒப்பிடுகையில் உலகளாவிய நோய்த்தொற்றின் தோற்றத்திலிருந்து இலங்கை 5 சதவீதத்திற்கு மேலான தொழிலின்மை வீதங்களைப் பதிவுசெய்துள்ளது. இந்த வகையில், அவ்வாறான வாழ்வாதார இழப்புக்கள் குறிப்பாக வறுமைக் கோட்டிற்குச் சற்று மேல்நிலையிலுள்ளவர்கள் மற்றும் சமூக பாதுகாப்பு வலையமைப்பின் எல்லைக்கு வெளியிலுள்ளவர்கள் தொடர்பில் அதிகரித்த பாதிக்கக்கூடிய தன்மையினையும் அதிகரித்த வறுமையினையும் விளைவிக்கும்.

2021இன் முதலரைப்பகுதியில் அவதானிக்கப்பட்ட மீட்சியானது 2020 மாச்சில் உலகளாவிய நோய்த்தொற்றின் தோற்றத்திலிருந்து பல்வேறு வழிகளினூடாக பொருளாதாரத்தின் சகல ஆர்வலர்களுக்கும் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அசாதாரண ஆதரவின் பின்னணியில் அமைந்துள்ளது. இது தனியார் துறை, வங்கித்தொழில் துறை மற்றும் அரசாங்கத்திற்கான ஆதரவினை உள்ளடக்கியுள்ளது. நிதியியல் துறையும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய இடையூறுகளின் எதிர்க்கணிய தாக்கங்களைச் சீராக்குவதற்கு வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் உள்ளடங்கலாக கடன்பாட்டாளர்களுக்குப் பரந்த அடிப்படையிலான ஆதரவினை வழங்கியுள்ளது. மத்திய வங்கி முறையற்ற தண்டங்களிலிருந்தும் வலிந்து கையகப்படுத்தல்களிலிருந்தும் பாதிக்கப்பட்ட வியாபாரங்களினையும் தனிப்பட்டவர்களினையும் பாதுகாப்பதற்கான படிமுறைகளையும் மேற்கொண்டது. இருப்பினும், அவ்வாறான தூண்டல்களை பாதகமான பேரண்டப் பொருளாதார எதிர்பாரா விளைவுகளும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் கரிசனைகளும் இல்லாமல் காலவரையறையின்றித் தொடர முடியாது. அதேவேளை, முன்னோக்கிச் செல்கையில் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் வாடிக்கையாளர் குழுமம் என்பனவற்றிற்கிடையிலான உறவுமுறைகள் தொடர்பில் உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கங்களை அடையாளங்காண்பது எதிர்காலத்தில் கொடுகடன் மதிப்பீட்டினை மேற்கொள்ளும் போது அத்தியாவசியமாகின்றது.

குறுங்காலத்தில் வியாபாரங்களிலும் குடியிருப்பாளர்களிலும் நீடித்த வடுத்தாக்கமொன்றினையும் அதன்மூலம் நடுத்தர காலத்தில் இலங்கைப் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி உத்வேகத்திலும் வாய்ப்புக்களிலும் நச்சு வட்டத் தாக்கமொன்றினை உருவாக்கக்கூடிய கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினையும் முடக்கங்களையும் மேற்கூறப்பட்டவை எடுத்துக்காட்டுகின்றன. முன்னோக்கிச் செல்கையில், அரசாங்கம் உலகளாவிய நோய்த்தொற்றின் மனித இழப்புக்களைக் குறைக்கும் வேளையில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைந்தளவான வளர்ச்சியிலிருந்து மீட்சியடைவதற்கு ஏற்கனவே போராடிக்கொண்டிருந்த இலங்கைப் பொருளாதாரத்தின் மீது இச்சூழ்நிலைகளின் பொருளாதார செலவினைக் குறைத்தல் என்பனவற்றிற்கிடையில் தீவிரமானதும் முழுமையானதுமான சமநிலையொன்றினைத் தொடர்ந்தும் பேணுவது இன்றியமையாததொன்றாகும். அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு தற்போது தொடரப்படுகின்ற கொவிட்-19 தடுப்பூசியேற்றும் செயற்றிட்டமானது இச்சமநிலையினைப் பேணுவதில் மிகவும் முக்கியமானதாகும். குறிப்பாக 2021 யூலையிலிருந்து அவதானிக்கப்படக்கூடிய மிகவும் பாராட்டத்தக்க முன்னேற்றமானது எதிர்வரும் காலப்பகுதியில் கொவிட்-19 நோய்த்தொற்றிலிருந்து தோன்றும் எவ்வித இடையூறுகளினையும் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், பொதுமக்கள் விதித்துரைக்கப்பட்ட சுகாதார வழிகாட்டல்களை நெருக்கமாகப் பின்பற்றுவதும் பொருளாதாரத்தின் மீட்சிக்கு இன்றியமையாததாக அமையும். அப்போது மாத்திரமே இலங்கைப் பொருளாதாரத்திற்கான அனைத்தையுமுள்ளடக்கிய மற்றும் நீடித்துநிலைக்கக்கூடிய வளர்ச்சி உத்வேகமொன்றின் உருவாக்கத்திற்கு வழிவகுக்கும் விதத்தில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு, மேம்பட்ட பொருளாதார வளர்ச்சி மற்றும் அதிகரித்த தாக்குப்பிடிக்கும் தன்மை என்பனவற்றின் ஒழுக்க விழுமிய சுழற்சியொன்றினை நிறுவ முடியும்.


## கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் நாணய விரிவாக்கம்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலும் பொருளாதாரங்கள் மற்றும் நிதியியல் சந்தைகளின் மீதான அதன் முன்னெப்பொழுதுமில்லாத தாக்கமும் உலகளாவிய ரீதியில் மத்திய வங்கிகளை அவற்றின் பொருளாதாரங்கள் மற்றும் நிதியியல் சந்தைகள் மீதான அதன் தாக்கத்தினைத் தணிப்பதற்கும் உலகளாவிய நோய்த்தொற்றினால் உந்தப்பட்ட நெருக்கடியினுள் சிக்குவதிலிருந்து அத்தகைய பொருளாதாரங்களைத் தடுப்பதற்கும் இணையற்றளவில் பாரம்பரியமற்ற கொள்கைகள் உள்ளடங்கலாக அசாதாரண நாணயக் கொள்கை வழிமுறைகளைப் பின்பற்றுவதற்குக் கட்டாயப்படுத்தின. இலங்கையின் விடயம் இதற்கு மாறுபட்டதாகக் காணப்படவில்லை. இலங்கையில் கொவிட்-19 நோய்த்தொற்றின் பரவல் 2020 மாச்சு- மே காலப்பகுதியில் நாடளாவிய முடக்கத்திற்கு வழிவகுத்து பொருளாதாரத்தின் சகல பிரிவுகளிலும் அதிர்வுகளை ஏற்படுத்தி, உலகளாவிய நோய்த்தொற்றின் மீளெழுச்சியுடன் அதன்பின்னரான பல்வேறு அலைகளில் பகுதியளவான முடக்கங்கள் மற்றும் நகர்வு மீதான கட்டுப்பாடுகளினைத் தொடர்ந்தமை மில்லியன் கணக்கானோரின் உயிர்களையும் வாழ்வாதாரங்களையும் பாதித்திருந்தன. நகர்வு மீதான கட்டுப்பாடுகள், தொழிற்சாலைகளை மூடுதல் மற்றும் உள்நாட்டு உற்பத்திகளை நிறுத்துதல் என்பன நிச்சயமற்றதன்மையினை அதிகரிக்கவும் உள்நாட்டுக் கேள்வியின் மீதான பாரிய அதிர்வொன்றினைத் தூண்டவும் வழிவகுத்தன. சந்தைகள் மற்றும் பொருளாதாரத்தின் மீதான அதிர்வுகளின் தாக்கத்தினைக் குறைப்பதற்குத் துரிதமானதும் கணிசமானதுமான கொள்கைத் தலையீடொன்று தேவைப்பட்டது.

இதற்கமைய, இலங்கை மத்திய வங்கி உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்பத்தில் கொள்கைத் தளர்த்தல் வழிமுறைகளின் தொடரொன்றினைப் பின்பற்றியது. கடன்பாடுகளின் செலவினங்களைக் குறைக்கும் நோக்குடன் மத்திய வங்கி அதன் முக்கிய கொள்கை வட்டி வீதங்களைக் குறைத்த வேளையில், வட்டிவீத உச்சங்களை விதித்தல் அதேபோன்று விசேட தாழ்ந்த வட்டி வீத கடன் செயற்றிட்டங்களை அறிமுகப்படுத்துவதனூடாக சிறப்பு கடன் வழங்கல் வீதங்களைக் குறைத்திருந்தது. மேலும், நியதி ஒதுக்கு விகிதத்தின் குறைப்பு, திறைசேரி முறிகளின் கொள்வனவினூடாக அரசாங்கத்திற்கு அவசியமான நிதியிடலை வழங்குதல் மற்றும் சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதி போன்ற சலுகைக் கொடுகடன் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் என்பன உள்நாட்டு நிதியியல் சந்தைக்குத் திரவத்தன்மையினை உட்செலுத்தியதுடன் அதன்மூலம் நிதியியல் சந்தைகளின் மீதான அழுத்தங்களைத் தளர்த்திய வேளையில் பொருளாதாரத்தின் தேவையுள்ள துறைகளுக்கு கடன் வழங்கலையும் ஊக்குவித்திருந்தது. மத்திய வங்கி பல்வேறு கொடுகடன் சட்ட இசைவுத்தாமத செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதனூடாக உலகளாவிய நோய்த்தொற்றினால் இடர்பாட்டிற்குள்ளான வியாபாரங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கு மேலதிக நிவாரணத்தினை வழங்கிய வேளையில் ஒழுங்குமுறைப்படுத்தல் சகிப்புத்தன்மையினூடாக நிதியியல் நிறுவனங்களுக்கும் ஆதரவளித்திருந்தது. மேலும், மத்திய வங்கி உள்நாட்டுப் பொருளாதாரத்தில் கொடுக்கல் வாங்கல்களினை வசதிப்படுத்துவதற்கான நாணய தேவைப்பாடுகளையும் உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில் நாணயத்திற்கான அதிகரித்த முன்னெச்சரிக்கைக் கேள்வியினைத் தொடர்ந்தும் பூர்த்திசெய்தது.

மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இவ்வாறான உறுதிப்பாட்டினை-மையப்படுத்தியதும் வளர்ச்சி-ஆதரவு வழிமுறைகளினாலும் வலுவூட்டப்பட்டு உள்நாட்டுப் பொருளாதாரம் பெரும் பொருளாதாரப் பேரழிவொன்றினைத் தவிர்த்து படிப்படியாக முன்னோக்கி நகர்ந்ததுடன் பொருளாதார நடவடிக்கையிலும் மனோபாவத்திலும் குறிப்பிடத்தக்கதொரு மீட்சியினைப் பதிவுசெய்தது. மேலும், பொருளாதாரத்தின் தேவையானதும் அதிக உற்பத்தித்திறன் வாய்ந்ததுமான துறைகளுக்குத் தாழ்ந்த செலவுக் கொடுகடன் வழங்கலில் குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பும் அவதானிக்கப்பட்டதுடன் அதன்மூலம் அதன் வளர்ச்சி வாய்ப்புக்களை மேலும் அதிகரித்தது. உலகளாவிய ரீதியான விரைவான கொள்கை ஆதரவு இல்லாதிருப்பின் உலகப் பொருளாதார சரிவின் தீவிரத்தன்மை குறைந்தது மூன்று மடங்கு அதிகமாயிருந்திருக்குமென பன்னாட்டு நாணய நிதியத்தின் உலக பொருளாதார தோற்றப்பாடு குறிப்பிட்டுள்ளமையானது கொள்கைத் தூண்டலின் முக்கியத்துவத்தினையும் அவ்வாறான கொள்கை ஆதரவு இல்லாதிருப்பின் ஏற்படும் சாத்தியமான பொருளாதார இழப்புக்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

கொள்கை ஊக்குவிப்பு மற்றும் கொவிட்-19 தடுப்பூசியேற்றும் செயற்றிட்டங்களின் வெற்றிகரமான முன்னெடுப்பினால் ஆதரவளிக்கப்பட்டு உலகளாவிய ரீதியில் பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக இயல்புநிலைக்குத் திரும்பலுடன் உலகெங்கிலுமுள்ள மத்திய வங்கிகள் உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்பத்திலிருந்து விரிவாக்கப்பட்ட ஆதரவினைப் புறக்கீடு செய்வதற்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சில வழிமுறைகளுடன் நாணயக் கொள்கை இறுக்கமாக்கலுக்கான தேவைப்பாட்டினை சமிக்ஞை செய்துள்ளன. அதே பாணியில், இலங்கை மத்திய வங்கி உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையின் படிப்படியான வழமைக்குத்திரும்புதலின் விளைவாக எதிர்காலத்தில் கேள்வியினால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தங்களின் கட்டியெழுப்பப்படுதல் என்பனவற்றினை கவனத்திலெடுத்து 2021 நடுப்பகுதியிலிருந்து நாணய நிலைமைகளை இறுக்கமாக்குவதற்கு அனுமதித்ததுடன் அதன் முக்கிய கொள்கை வீதங்களை அதிகரித்ததுடன் 2021 செத்தெம்பர் 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நியதி ஒதுக்கு விகிதத்தினை அதிகரித்து 2021 ஓகத்து நடுப்பகுதியில் அதனுடைய தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு சமிக்ஞை செய்தது. மேலும், அரச பிணையங்கள் மீதான முதலாந்தர ஏலவிற்பனைகளில் ஏற்புக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதமும் 2021 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து நீக்கப்பட்டு அரச பிணையங்கள் மீதான விளைவுகளை சீராக்குவதற்கும் சந்தையினால் நிர்ணயிக்கப்பட்டதாக அமைவதற்கும் அனுமதித்த வேளையில் முதலாந்தர சந்தை ஏலவிற்பனைகளில் திறைசேரி உண்டியல்களின் மத்திய வங்கியின் கொள்வனவுகளுக்கான தேவையினையும் வரையறைசெய்தது. மேலும், மத்திய வங்கி தற்போது நிலவுகின்ற இறுக்கமான நாணய நிலைமைகளைப் பேணும் நோக்குடன் உள்நாட்டு பணச் சந்தையில் திரவ மட்டங்களில் பற்றாக்குறை காணப்பட்டமைக்கு மத்தியிலும் ஓரிரவு மற்றும் கால மீள்கொள்வனவு ஏலவிற்பனைகளைத் தொடர்ந்தும் நடத்தியது. இறுதியாக, உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட குறிப்பிடத்தக்க நிதியிடல் மட்டங்களைப் புறக்கீடு செய்வதற்கான தேவையினை அடையாளங்கண்டு, மத்திய வங்கி உள்நாட்டுப் பொருளாதாரத்தில் தற்போது தொடரப்படுகின்ற மீட்சியினைப் பாதிக்காது பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை பாதுகாக்கும் நோக்குடன் *'பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கான ஆறு மாத கால வழிகாட்டலில்'*, குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய நாணய ஊக்குவிப்புக்களை படிப்படியாக இல்லாதொழிப்பதில் ஈடுபடும்.


பொருளாதாரத்தின் ஏனைய
இறைத் துறையின்
2019-கா4 1.6%
2020-கா2 -16.4%
2021-கா1 4.3%
2021-கா2 12.3%
மொ.உ.உற்பத்தி
இலங்கை ரூபா போட்டித்தன்மை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது...
வணிக ஏற்றுமதிகள் 2021 சன-ஒகத்து காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கும் மேல் பதிவுசெய்யப்பட்டன
ஏற்றுமதிகள் (ஐ.அ.டொ. மில்)
937 952 1,094 818 892 1,007 1,104 1,100
இறக்குமதிகள் (ஐ.அ.டொ. மில்)
1,592 1,524 1,926 1,707 1,607 1,659 1,710 1,687
வெளிநாட்டுத் துறையானது
முக்கிய இறை மீதிகள்
பொருளாதாரமானது 2021இன் முதலரைப்பகுதியில் குறிப்பிடத்தக்க மீட்சியொன்றினை ஏற்படுத்தியிருந்த அதேவேளையில்...
ஆரம்ப மீதி
ஒட்டுமொத்த இறை மீதி
நடைமுறைக் கணக்கு மீதி
அரசிறை
செலவினம்
9.1% 5.1%
11.8% 4.9%
20.3% 10.9%
21.4% 11.0%
முதன்மை பணவீக்கமானது (கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், ஆண்டிற்காண்டு) தொடர்ச்சியாக 12 ஆண்டுகளுக்கு மேலாக ஒற்றை இலக்க மட்டங்களில் காணப்படுகின்றது...
காத்திரமான கொள்கை வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலுடன் நடுத்தர காலத்தில் 4-6 சதவீதத்தினுள் பேணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது...
உணவுப் பணவீக்கம்
உணவல்லாப் பணவீக்கம்
உலகளாவிய விலை அதிகரிப்புக்கள்
2021 ஒகத்து நடுப்பகுதியில் சில அசாதாரண நாணயக் கொள்கை
சவால்மிக்க உள்நாட்டு மற்றும் உலகளாவிய பேரண்டப் பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியிலும் நிதியியல் துறையானது தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினைக் கொண்டிருந்தது...
வங்கித்தொழில் துறை
உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறை
காப்புறுதித் துறை